

மதுரையில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நூலகத்தை வருகிற 15ந்தேதி கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ளார். அதற்கான தயார் நிலை குறித்து பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்ட போது எடுத்தபடம். உடன் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், பொதுப்பணித்துறை அரசு முதன்மை செயலாளர், பொது நூலகத்துறை இயக்குநர், சட்ட மன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், பூமிநாதன் உட்பட பலர் உள்ளனர்.

## ரேஷன் கடைகளில்

# தக்காளி விற்பனைக்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!



சென்னை, ஜூலை 8-

ரேஷன் கடைகளில் குறைந்த விலையில் தக்காளி விற்பனை செய்வது பொதுமக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாக அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார்.

இதுகுறித்து சென்னை, தலைமை செயலகத்தில் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

சென்னையில் 82 ரேஷன் கடைகளிலும், 27 பண்ணை பசுமை கடைகள் உள்ளிட்ட கடைகளில் தக்காளி விற்பனைசெய்யப்பட்டுவருகிறது. அதன்படி முதல்கட்டமாக சென்னை, தாம்பரம், ஆவடி மாநகராட்சி பகுதிகளில் தக்காளி விற்கப்படுகிறது. அரசு ஒரு புதிய முயற்சி இதை செய்து வருகிறது.

இது பொது மக்களுக்கு எந்தளவுக்கு பயன்பெறுகிறது என்பதை பொறுத்து மற்ற ரேஷன் கடைகளிலும் விரிவுப்படுத்தப்படும். தற்போதைய சூழ்நிலையில் எந்த பிரச்சினையும் இல்லாமல், பொது மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல அகில இந்திய அளவில் தக்காளி தட்டுப்பாடு உள்ளது. ஒன்றிய அமைச்சரே அதை தெளிவுபடுத்தி உள்ளார். இந்தியாவில் பல மாநிலங்களில் உள்ளவர்கள் தொலைபேசியில், தமிழ்நாடு முதல்வர் எடுத்த நடவடிக்கையை பாராட்டுகிறார்கள். தமிழ் நாட்டில் மட்டுமல்ல. மகாராஷ்டிரா உள்ளிட்ட பல மாநிலங்களில் தக்காளி தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் உள்ளது. அந்த மாநில முதல்வர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், தமிழக மக்களுக்கு குறைந்த விலையில் தக்காளி கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்த நடவடிக்கையால் ரேஷன் கடைகளில் தக்காளி விற்பனை செய்யப்படுகிறது. இதற்காக நமது முதல்வரை வெளிமாநிலத்தில், உள்ள தமிழர்கள் பாராட்டுகிறார்கள். தமிழ்நாடு அரசு ஒதுக்கிய 82 ரேஷன் கடைகளில் தக்காளி தற்போது விற்பனை நடைபெற்று வருகிறது.

ரேஷன் கடைகளில் ஒரு கிலோ தக்காளி ரூ.60க்கு விற்கப்படுகிறது. மற்ற கடைகளில் ரூ.100க்கும் மேல் விற்கப்படுகிறது. இதனால் கூடுதலான ரேஷன் கடைகளில் விற்பனை செய்ய ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. முதலில் மாநகராட்சிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்து மற்ற மாநகராட்சிகளிலும் விற்பனை செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டியளித்தார்.

## நெடுஞ்சாலைத்துறை முறைகேடு புகார்!

# எடப்பாடி மீது புதிதாக விசாரணை!

### சென்னை-உயர்நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத் துறை தகவல்

சென்னை, ஜூலை 8-

முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிரான நெடுஞ்சாலை துறை முறைகேடு புகார் தொடர்பாக, புதிதாக விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத் துறை தெரிவித்துள்ளது.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நெடுஞ்சாலைத் துறையில் டெண்டர் கோரியதில் 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடு நடந்துள்ளதாக கூறி, முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிராக அளித்த புகார் மீது, சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்து விசாரிக்க உத்தரவிடக் கோரி தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்பாரதி, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், நெடுஞ்சாலை துறை டெண்டர் முறைகேடு புகார் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தும்படி, 2018ம் ஆண்டு உத்தரவிட்டிருந்தது. இதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்ற உத்தரவை ரத்து செய்ததுடன், வழக்கை சென்னை உயர்நீதிமன்றத்துக்கு மாற்றியிருந்தது. இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன் விசாரணைக்கு வந்தபோது, இந்த வழக்கை திரும்பப் பெற அனுமதிக்க வேண்டுமென ஆர்.எஸ்.பாரதி தரப்பில் கோரப்பட்டது. மேலும், முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிரான நெடுஞ்சாலை துறை முறைகேடு புகார் தொடர்பாக, புதிதாக விசாரணை நடத்த உத்தரவிடப் பட்டுள்ளதாகவும் லஞ்ச ஒழிப்புத் துறை தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜார்கண்டில் – முஸ்லிம் வாலிபர் அடித்துக் கொலை!

# மதவெறியர்கள் 10 பேருக்கு 10 ஆண்டுகள் சிறை!

### ஜார்கண்ட் மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு!

ராஞ்சி, ஜூலை 8-

'ஜெய் ஸ்ரீராம், ஜெய் அனுமான்' எனக் கூறச் சொல்லி முஸ்லிம் வாலிபர் கும்பலால் அடித்துக் கொல்லப்பட்ட வழக்கில், குற்றவாளிகள் 10 பேருக்கு 10 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை விதித்து ஜார்க்கண்ட் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலம் செரைகேலா கர்ஸ்வான் மாவட்டத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு ஜூன் 17 அன்று தப்ரேஸ் அன்சாரி என்ற வாலிபர், மதவெறிக் கும்பலால் கொடூரமான முறையில் அடித்துக் கொல்லப்பட்டார். 'ஜெய் ஸ்ரீராம், ஜெய் அனுமான்' என கூறுமாறு, பல மணி நேரமாக அவரை கட்டி வைத்து அடித்ததில், படுகாயம் அடைந்த தப்ரேஸ் அன்சாரி, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, 5 நாட்களுக்குப் பிறகு சிகிச்சை பலனின்றி இறந்து போனார். இந்த சம்பவம் அப்போது நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. நாடாளுமன்றத்திலும் இந்த விவகாரம் எதிர்க்கட்சிகளால் கிளப்பப்பட்டது.

அப்போது, மதவெறி காரணமாக தப்ரேஸ் கொல்லப்படவில்லை. பைக் திருட முயன்ற போதுதான் பொதுமக்களால் அடித்துக் கொல்லப்பட்டார் என்று இந்துத்துவா மதவெறியர்கள் கதைகளை பரப்பினர்.

ஆனால், 'ஜெய் ஸ்ரீராம், ஜெய் அனுமான்' கூறச் சொல்லியே தப்ரேஸ் அன்சாரி தாக்கப்பட்டார் என்பதற்கான வீடியோ ஆதாரங்கள் வெளியாகி உண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தன. இந்நிலையில், தப்ரேஸ் அன்சாரி அடித்துக் கொல்லப்பட்ட வழக்கில் ஜார்க்கண்ட் மாவட்ட நீதிமன்ற நீதிபதி அமித் ஷேகர் புதன்று தண்டனை விவரங்களை அறிவித்தார். அதில், குற்றம் சாட்டப்பட்ட 13 பேரில் ஒருவர் வழக்கு விசாரணையின்போதே இறந்து விட்ட நிலையில், 2 பேரை விடுதலை செய்தும், எஞ்சிய 10 பேருக்கு தலா 10 ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனையும், தலா ரூ. 15 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.



சென்னை தலைமைச் செயலகத்தில், சிப்காட் சார்பில் நிறுவன சமூக பொறுப்புடைமை செயல்பாடுகளின் (CSR Fund) கீழ் விளையாட்டு போட்டிகளை மேம்படுத்துவதற்காகவும், விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்காகவும் ரூபாய் 2 கோடி நிதிக்கான காசோலையை நேற்று முன்தினம் (06.07.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி எ.சுந்தரவல்லி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சிப்காட் நிறுவனத்தின் செயல் இயக்குநர் நிஷாந்த் கிருஷ்ணா ஆகியோர் உள்ளனர்.

## ஊரகப் பகுதி மாணவர்களுக்கு உலகத் தரத்தில் தொழில்நுட்பக் கல்வி - மைக்ரோ சாஃப்ட்டுடன் ஒப்பந்தம்!

# அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

### "கல்வியிற் சிறந்த தமிழரெனப் பார்போற்றப் பாடுபடுவோம்!" எனப் பதிவு!

**சென்னை, ஜூலை 8-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று விடுத்த சமூக வலைதளப் பதிவொன்றில், தமிழ்நாட்டின் ஊரகப் பகுதி மாணவர்களுக்கு உலகத் தரத்தில் தொழில்நுட்பக் கல்வி வழங்கிட 'மைக்ரோ சாப்ட்' நிறுவனத்துடன் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை ஒப்பந்தம் மேற்கொண்ட அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியைப் பாராட்டியுள்ளார்.**

**'கல்வியிற் சிறந்த தமிழரெனப் பார் போற்றப் பாடுபடுவோம்!' என அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தம்பி அன்பில் மகேஸ் அவர்கள், அமெரிக்கப் பயணத்தின்போது, ஊரகப் பகுதி மாணவர்களுக்கு உலகத்தரத்திலான தொழில்நுட்பக் கல்வி அறிமுகத்தை வழங்க Microsoft உடன் இணைந்து தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை மேற்கொள்ளும் முன் முயற்சிகளைப் பற்றி என்னிடம் தொலைபேசியில் தெரிவித்தார்.



தமிழர்களின் இதயத் துடிப்பான கல்வியை உலகத்தரத்திற்கு உயர்த்துவதே நமது திராவிட மாடல் அரசின் இலக்கு. அதற்கான பணிகளில் ஈடுபடும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுகள்!

கல்வியிற்சிறந்த தமிழரெனப் பார் போற்றப் பாடுபடுவோம்!

இவ்வாறு அப்பதிவில் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## சிவகங்கை மாவட்டத்தில்

# ரூபாய் ஐந்து லட்சம் செலவில் 10 ஜோடிகளுக்கு இலவச திருமணம்!

சிவகங்கை. ஜூலை 8-

தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் உத்தரவின் பேரில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு அவர்கள் ஆலோசனையின் பேரில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வழிகாட்டுதலின் அடிப்படையில் சிவகங்கை மாவட்டத்தில் நேற்று 10 ஜோடிகளுக்கு இலவச திருமணங்கள் நடைபெற்றது.

இதில் சிவகங்கை மாவட்டம் விட்டனேரி கொல்லங்குடி வெட்டுடையார் காளியம்மன் கோவிலில் நரிக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த தனுஷ் விஜயலட்சுமி சூரக்குளத்தைச் சேர்ந்த சரண் போஜ் மற்றும் தமிழ் முருகன் போது ஆகிய மூன்று ஜோடிகளுக்கு இலவச திருமணம் இந்து சமய சிவகங்கை மண்டல இணை ஆணையர் பழனி குமார் தலைமையில் நடைபெற்றது.திருமணத்தை அர்ச்சகர்கள் நேரு,செல்வம் ஆகியோர் நடத்தி வைத்தார்கள். திருமணத்தில் மணமக்களுக்கு தலா ரூபாய் 50ஆயிரம்வீதம் ரூபாய் 1லட்சத்து 50ஆயிரம் மதிப்பில் குத்துவிளக்கு பீரோ, தலையணை, சமையல்பாத்திரங்கள் சீர்வரிசையாக வழங்கப்பட்டது. மாவட்டத்தில் நடைபெறும் பத்து ஜோடிகளுக்கு ரூபாய் ஐந்து லட்சம் மதிப்புள்ள சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டது. இந்த திருமண நிகழ்ச்சியில் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினரும், பொதுக்குழு உறுப்பினருமான ஏ.ஆர்.ஜெயமுர் த்தி, ஒன்றிய செயலாளர்கள் ஆர்.எம்.கென்னடி, யோக கிருஸ்ணகுமார், ஆரோக்கியசாமி, கொல்லங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் மெய்ஞான மூர்த்தி, ஆகியோர் மணமக்களை வாழ்த்தி பேசினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாணவர் அணி கார்த்தி, பால்பாண்டி, குட்டி, தமிழ்ச்செல்வன், சுசீந்திரன், வழக்கறிஞர் சதீஷ், செல்லப்பாண்டி, பாலமுருகன், அசோக், முருகன், அல்லூர் ரவி, காளை மணி, உடலியல் அம்பலம் ஆகியோர் கலந்து கொண்டார்கள். முடிவில் கொல்லங்குடி விட்டனேரி காளியம்மன் கோயில் செயல் அலுவலர் திருமதி நாராயணி நன்றி கூறினார். விழாவை தொடர்ந்து திருமண ஜோடிகள், மற்றும் உறவினர்களுக்கு அறுசுவை விருந்து வழங்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டத்தில் தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரி அம்மன் கோயிலில் ஒரு ஜோடிக்கும், அரியக்குடி திருவேங்கடம் உடையார் பெருமாள்கோயிலில் மூன்று ஜோடிகளுக்கும், கொல்லங்குடி வெட்டுடையார் காளியம்மன் கோவிலில் மூன்று ஜோடிகளுக்கும் பரமக்குடியில் திரௌபதி அம்மன் கோவிலில் மூன்று ஜோடிகளுக்கும் மொத்தம் 10 ஜோடிகளுக்கு நான்குகோவில்களில் இலவச திருமணங்கள் நடைபெற்றது. இந்த திருமணத்திற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் பழனிக்குமார் தலைமையில் அறநிலையத் துறை அலுவலர்கள் செய்திருந்தார்கள். அரியக்குடி. காரைக்குடி தாலுகா அரியக்குடி திருவேங்கடப் பெருமாள் கோவிலில் நடைபெற்ற திருமணத்தில் எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. காரைக்குடி நகர்மன்ற தலைவர் எஸ்.முத்துதுரை, துணைத் தலைவர் என். குணசேகரன், சொ.கண்ணன் காரைசுரேஷ் அறங்காவலர் குழு உறுப்பினர் வெள்ளையன் செட்டியார் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# தெலுங்கானா அருகே ஓடும் ரயிலில் தீ விபத்து!

ஐதராபாத், ஜூலை 8-

தெலுங்கானா அருகே சென்றுகொண்டிருந்த பயணிகள் விரைவு ரயில் திடீரென தீப்பிடித்த நிகழ்வு அப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது.

ஹவுராவில் இருந்து செகந்திராபாத் வந்த "ஃபலக்னுமா" பயணிகள் விரைவு ரயில், தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் அருகே திடீரென தீப்பிடித்தது.

இதனைப் பார்த்த ரயில் ஓட்டுநர் உடனடியாக ரயிலை நிறுத்தியதால், பயணிகள் பதற்றத்துடன் ரயிலில் இருந்து கீழே இறங்கினர்.

இந்த விபத்தில், ஃபலக்னுமா எக்ஸ்பிரஸ் ரயிலின் 3 பெட்டிகள் சேதமடைந்துள்ளன. விபத்தில் பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற மானியக் கோரிக்கையில் 110 விதியின் கீழ் சென்னைக்கு அருகாமையில் குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதன் முன்னேற்றம் குறித்து, நேற்று முன்தினம் (06.07.2023) தலைமைச் செயலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், அரசு துறைகளின் உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்டம் விளாச்சேரியில் தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அன்னாரின் மணிமண்டபத்தில் உள்ள திருஉருவச் சிலைக்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்தபடம். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.